# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2345/52 - 2023 අගෝස්තු මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.08.17

*2345/52 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 94/ 47* (VIII) (A)

***(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்***

6 (2) (ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரசன்ன ரணதுங்க ஆகிய நான், இக் கட்டளை மூலம் -

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "சாந்தி விஹாரை" என அழைக்கப்படும் காணி இடப்பிரதேசம் மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பிரதேசமொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்ட சாந்தி விஹாரைக்கு உருவரைப் பௌதீகத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமெனவும் பணிக்கின்றேன்.

**பிரசன்ன ரணதுங்க,**
நகர அபிவிருத்தி மற்றும்
வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2023, ஓகத்து 08.


1A - G 40139 — 16 (2023/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

சாந்தி விஹாரை புனித காணி இடப்பிரதேசம்

*கிழக்கு மாகாணத்தில், திருகோணமலை நிருவாக மாவட்டத்திலுள்ள, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட, இலக்கம் 31J புல்மோட்டை கிராம அலுவலர் பிரிவு (இலக்கம் 04) இல், புல்மோட்டை கிராமத்தில் அமைந்துள்ள, 2019 செத்தெம்பர் மாதம் 30 ஆந் திகதியைக் கொண்ட நில அளவையாளர் தலைமையதிபதியின் வரைபட இல. FTP 12 இல் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறாக காணித்துண்டு இல. 1472 (ஹெக்டயர்கள் 15.5097), காணித்துண்டு இல. 1475 (ஹெக்டயர்கள் 4.7119), காணித்துண்டு இல. 1476 (ஹெக்டயர்கள் 19.4422), காணித்துண்டு இல. 1397 (ஹெக்டயர்கள் 0.7568) எனக் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறான பரப்பளவில் 40.4206 ஹெக்டெயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளதுமான வரகுதுறை என அழைக்கப்படும் அக்காணியின் இடப்பரப்பு அடங்கலும் அதன் எல்லைகள் பின்வருமாறு :-*

*காணித்துண்டு இல. 1472 - வரகுதுறை காணி*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1477;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1477 மற்றும் 1473;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1473 மற்றும் 1477;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1477.*

*காணித்துண்டு இல. 1475 - வரகுதுறை காணி*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1474 மற்றும் 1477;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1477, 1181 மற்றும் 1182;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1181 மற்றும் 1182 மற்றும் 1476;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1476 மற்றும் 1474.*

*காணித்துண்டு இல. 1476 - வரகுதுறை காணி*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1474, 1397 மற்றும் 1475;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1475, 1182 மற்றும் 1477;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1477;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1474 மற்றும் 1397.*

*காணித்துண்டு இல. 1397 - வரகுதுறை காணி*

*வடக்கு : காணித்துண்டு இலக்கம் 1474 மற்றும் 1476;*
*கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1476;*
*தெற்கு : காணித்துண்டு இலக்கங்கள் 1476;*
*மேற்கு : காணித்துண்டு இலக்கம் 1476 மற்றும் 1474.*

EOG *08 - 0170*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.